# PRESS NOTES

**The High Court upheld the conviction of Tr.V.Sangan S/o.Vellaiyan, Assistant who was working at the Office of the Regional Joint Director, Department of Industries & Commerce, Thiru.Vi.Ka. Industrial Estate, Guindy, Chennai-32, for the crime of fraudulently obtaining bribe Rs.700/- for issuing a MSME Certificate**.

The complainant Thiru.K.Yezhilovian, S/o.Kannayiram, No.229/28/1, Tenampettai, Ramasamy Street, Kondithoppu, Chennai-79 approached the accused on 23.03.2009 at his office to get Micro Small Medium Entrepreneur Certificate for his industry. At that time the accused demanded illegal gratification of Rs.700/- from the complainant for issuing Micro Small Medium Entrepreneur Certificate.

The complainant was not willing to give the bribe. He lodged a complaint on 26.03.2009 at about 15.00 hrs with Inspector of Police, DVAC, Chennai. Then the case was registered U/s 7 & 13(2) r/w 13(1)(d) of Prevention of Corruption Act 1988.

In pursuance of the above said demand on 26.03.2009 at about 17.40 hrs. at the office of the Regional Joint Director, Department of Industries & Commerce the Accused reiterated his earlier demand of Rs. 700/- from the complainant to hand over the Micro Small Medium Entrepreneur Certificate. Subsequently the accused Tr.V.Sangan was arrested and remanded to Judicial custody. The case was tried at the Special Court, Chennai.

On 22.02.2017 the Special Court, Chennai delivered the judgment. The accused Tr.V.Sangan was sentenced to undergo 6 month Rigorous Imprisonment and shall pay a fine of Rs.1000/- in default to undergo 1 month Simple Imprisonment for u/s 7 of Prevention of Corruption Act, 1988.

Today 16.02.2024 the High Court upheld the conviction of Tr.V.Sangan S/o.Vellaiyan, Assistant who was working at Office of the Regional Joint Director, Department of Industries & Commerce, Thiru.Vi.Ka. Industrial Estate, Guindy, Chennai-32, for the crime of fraudulently obtaining bribe Rs.700/- for issuing a MSME Certificate.

# பத்திரிக்கைசெய்தி

**மண்டல இணை இயக்குநரகம், தொழில் வணிகத்துறை, கிண்டி, சென்னை-32ல் பணிபுரிந்தஉதவியாளர் திரு.வெ.சங்கன் த/பெ.வெள்ளையன் என்பவர் MSMEசான்றிதழ் வழங்க லஞ்சமாக ரூ.700/- பெற்றகுற்றத்திற்காகஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சிறப்பு நீதிமன்றம் வழங்கியதண்டனையைஉயர்நீதிமன்றம் உறுதிசெய்துதீர்ப்பு.**

சென்னை, தேனாம்பேட்டை, ராமசாமிதெரு, கொண்டித்தோப்பைசேர்ந்த புகார்தாரர் திரு.க.எழிலோவியன் என்பவர் கடந்த 1983-ம் வருடம் முதல் சிறியளவில் எவர்சில்வர் பாத்திரம் தயாரிக்கும் கம்பெனிநடத்திவந்தார். கடந்த 23.03.2009 அன்றுபுகார்தாரின் மேற்படிகம்பெனிநடத்துவதற்குMSMEசான்றிதழ் பெறசென்னை-32, கிண்டியில் உள்ள மண்டல இணை இயக்குநரகம், தொழில் வணிகத்துறைக்குச் சென்று அங்கு பணிபுரிந்த திரு.வெ.சங்கன், உதவியாளர் அவர்களை சந்தித்து MSME சான்றிதழ் கேட்டபோது அவர் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கொடுக்குமாறு கூறியுள்ளார். மேலும் மேற்படி MSME சான்றிதழை பெற ரூ.700/- தரவேண்டும் என்று லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சபணத்தை கொடுக்க விருப்பமில்லாத புகார்தாரர் கடந்த 26.03.2009ஆம் தேதி லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளித்ததின் பேரில் வழக்குபதிவு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 26.03.2009ம் தேதி சுமார் 17.40மணியளவில் புகார்தாரர் திரு.க.எழிலோவியம் சென்னை-32, கிண்டியில் உள்ள மண்டல இணை இயக்குநரகம், தொழில் வணிகத்துறைக்குச் சென்று அங்கு பணியிலிருந்த உதவியாளர் திரு.வெ.சங்கன் அவர்களை சந்தித்து MSME சான்றிதழ் கேட்டுள்ளார். அதற்கு உதவியாளர் திரு.வெ.சங்கன் அவர்கள் முன்பு கேட்ட ரூ.700/-யை கொடுக்கும்படி கூறியுள்ளார். அதன் பேரில் புகார்தாரர் லஞ்சப்பணமான ரூ.700/- ஏதிரி திரு.வெ.சங்கன் அவர்களிடம் கொடுத்தார். இதன் தொடர்ச்சியாக திரு.வெ.சங்கன் லஞ்ச ஒழிப்புத் துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சிறப்பு நீதிமன்றம் சென்னையில் நடைபெற்று வந்த நிலையில் கடந்த 22.02.2017-ம் தேதி எதிரி மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு 1 வருடம் 6 மாதங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் ரூ.2,000/- அபராதமும் விதிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து எதிரி, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து வழக்கு நடைபெற்று வந்தது. இந்த நிலையில் இன்று 16.02.2024ம் தேதி மேற்கண்ட மேல்முறையீடு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, எதிரிக்கு சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சிறப்பு நீதிமன்றம், சென்னை வழங்கிய தீர்ப்பை உறுதி செய்து மாண்புமிகு உயர் நீதிமன்றம் நீதிபதி அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது.